**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 742/2025**

**Prosecution witness : அ.சா.6** **Date : 22.01.2026.**

| | |
|---|---|
| **Name : மணி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. ) (Accused 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சோடையூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். கடந்த 30.05.2025ம் தேதி காலை 6.00 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது சத்தம் கேட்டு சம்பவயிடம் சென்றேன். ஆனந்த் வாதியார் என்பவரை தன்ராஜ், மோகனா, அன்பரசன், முருகேசன் ஆகியோர் தடியால் முதுகில் அடித்தார்கள். தன்ராஜ் நீ கிட்ட வந்தால் வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.நான் பயந்து வீட்டிற்கு சென்றுவிட்டேன். அடிப்பட்ட நபர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்தார். அடித்தவர்களை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். எதிரிகள் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். நீதிமன்றத்தில் உள்ள தடியால் தான் அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) பெருமாள் மகன் ராஜுவ்காந்தி என்ற எதிரி என் உறவினர் என்றால் ஆமாம். இன்று நீதிமன்றத்திற்கு ராஜுவ்காந்தி வந்துள்ளாரா என்றால் இல்லை. அவர்களுக்குள் நிலப்பிரச்சனை காரணமாக பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நிலப்பிரச்சனை காரணமாக தான் தகராறு

நடந்ததாக காவலரிடம் சொன்னேன் என்றால் ஆமாம். சத்தம் கேட்ட பிறகு தான் நான் சென்றேன் என்றால் ஆமாம். ஆனந்தன் கழுத்தில் கொடுவாளால் அறுத்ததாக சொல்லியுள்ள நிலையில் நான் சென்று பார்த்த போது ஆனந்தன் கழுத்தில் காயம் இருந்தது. யார் வெட்டினார்கள் என்பதை நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. கொடுவாளை ஆனந்தன் காவல் துறையிடம் ஒப்படைத்தாரா என்றால் ஒப்படைத்தார்.

3) அதன் பின்னர் என்னை மிரட்டியதால் அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டேன். அதன் பின்னர் வேறு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**